பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு

The EELA NADU

மலர்: 19 ஆனி 17 றஜப் 13 இதழ்: 140

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-7-77

## எம்ஜிஆர் அமைச்சரவையில்

### 8 வழக்கறிஞர்கள்; 2. சினிமா துறையினர்

சென்னை, ஜூன் 30

தமிழ்நாட்டில் பதவிஏற்றுக் கொண்ட எம். ஜி. ஆரின் 14 பேர் கொண்ட அமைச்சரவையில் 8 வழக்கறிஞர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

சட்ட அமைச்சராகப் பதவி ஏற்றிருக்கும் திரு. நாராயண சுவாமி முதலியார் சென்னை உயர் நீதிமன்ற நீதியரசராகவும் முன்னர் பணியாற்றியுள்ளார்.

புதிய அமைச் சரவையில் திரைப்படத்துறையைச் சேர்ந்த இருவரும் பத்திரிகையாளர்கள் இருவரும் என்ஜினியர் ஒருவரும் தொழிற் சங்கத் தலைவர் ஒருவரும் அங்கம் வகிக்கின்றவர்.

திரு. எம். ஜி. ஆரும் திரு. வீரப்பனுமே திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள்.

நிதி அமைச்சராகப் பதவி ஏற்றுள்ள திரு. கே. மனோகரன் முன்னாள் தி. மு. க லோகசபை உறுப்பினராவார். 62, 67, 71-ம் ஆண்டு தேர்தல்களில் தி. மு. க. லோகசபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. மனோகரன் கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற லோகசபைத் தேர்தலில் வட சென்னைத் தொகுதியில் அ. இ. அ. தி. மு. க சார்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். (இ)

அலைகடலெனத் திரண்டுவந்த மக்களின் மத்தியில்

# எம். ஜி. ஆர். அமைச்சரவை

# பதவியேற்பு! தமிழகத்தின் தலைநகரம் விழாக்கோலம் பூண்டது!

— நமது விசேஷ நிருபர் —

அலையோ! வெள்ளமோ! ஜன சமுத்திரமோ! என்று அண்ணாகண்ட தமிழகத்தின் தலைநகரம் - சென்னை மாநகரம்-திக்குமுக்காடி, செயலிழந்து நகரின் நாலாபுறமும் போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டு, ஸ்தம்பிக்க; எங்கும் எதிலும் எம். ஜி. ஆர். என்ற 'ஆள்விழுங்கி' சுவரொட்டிகள் நகரை ஆக்கிரமித்து, இல்லங்கள்—சந்திகள்தோறும் வரவேற்று—வாழ்த்துக்கூற; மாவிலை, தோரணம், மங்கலவிளக்குகள் என்று அலங்கரிக்க, அந்த வெற்றிக் களிப்பிலே சென்னை மாநகரமே மூழ்கித் திணற — வாழ்த்தொலிகிளம்ப; அந்த வண்ணமிகு விழாநடுவே அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், "இந்தியநாட்டுக்கும் ... மக்களுக்கும் ... ஒற்றுமைக்கும் ... விசுவாசமாகக்கடமையாற்றுவேன்..." என்று தமிழக கவர்னர் முன்னிலையில் மக்கள் வெள்ளத்தின் மத்தியில் — சத்தியப்பிரமாணம் செய்து, பேரறிஞர் அழியாத [illegible] தமிழ்நாட்டின் மூன்றாவது [illegible] இன்று காலை சென்னை ராஜாஜி மண்டபத்தில் பதவியேற்றுக்கொண்டார்.

### பதவியேற்பு வைபவம்

சென்னை மாநகரத்தில் காங்கிரஸ் கட்சி நீண்டகாலமாக ஆட்சி நடத்தியதைத் தொடர்ந்து, 1967-ல் பேரறிஞர் அண்ணா தலைமையில் திராவிட முன்னேற்றக்கழகம் பதவிப் பொறுப்பை ஏற்றது. இதனைத் தொடர்ந்து சென்னை மாநிலம் தமிழ்நாடாக மலர்ந்தது! அண்ணா அமரரானதும் கலைஞர் மு. கருணாநிதி கழகத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றார். தொடர்ந்து நடைபெற்ற தேர்தலிலும் வெற்றிகண்டு, அண்ணா வழியில் ஆட்சியைக் கலைஞர் அமைத்தார். இப்போது அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு வழியில் மக்கள் திலகம் திரு. எம் ஜி இராமச்சந்திரன், புகழ்பூத்த தமிழகத்தின் புதிய முதல்வராக, இன்று விழாக்கோலம் பூண்ட தமிழகத்தில், மக்கள் வெள்ளத்தின் நடுவே ராஜாஜி மண்டபத்தில், தமிழக ஆளுநர் முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். இவரைத் தொடர்ந்து புதிய அமைச்சரவையின் 13 அமைச்சர்களும், சத்தியப்பிரமாணம் எடுத்து தத்தம் பதவிகளைப் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

### புதிய மந்திரிசபைஇன்றுகூடுகிறது

பதினான்கு அங்கத்தவர்களைக்கொண்ட அ. இ. அ. தி. மு. க. மந்திரிசபையின் முதலாவது கூட்டம் இன்று நடைபெறுகிறது.

### சட்டசபை திங்கள் கூடுகிறது

தமிழ்நாட்டின் புதிய சட்டசபை இம்மாதம் 4-ந் திகதி திங்கட்கிழமை கூடும் என்று புதிய முதல்வர் திரு. எம். ஜி. ஆர். தெரிவித்தார்.

### அண்ணா சமாதிக்கு அஞ்சலி

காலை 9-15 மணிக்கு பதவி ஏற்பு வைபவம் நடைபெற்றது. தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனும் சக அமைச்சர்களும் பதவி ஏற்ற பின்னர் அறிஞர் அண்ணாவின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தினர்கள். பெரியார் ஈ. வே.ராவின் சிலைக்கும் எம்.ஜி.ஆர். மாலை அணிவித்தார்.

அண்ணாசாலையில் உள்ள அண்ணாதுரையின் உருவச்சிலைக்கும்எம்.ஜி.ஆர். மாலைஅணிவித்தார்.

### தமிழில் பதவிஏற்றனர்

தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ்பட்வாரி ஆங்கிலத்தில் சத்தியப்பிரமாண உரையைக் கூற அமைச்சர்கள் தமிழில் அப்பிரமாணத்தைக் கூறி பதவி ஏற்றுக்கொண்டனர்.

### நினைவாலயங்களில் அஞ்சலி

பதவி ஏற்பு வைபவத்தின் பின்னர் கோட்டைக்குச் செல்லும் வழியில் திரு. எம். ஜி. ஆரும் சக அமைச்சர்களும் காந்திஜி, காமராஜர், ராஜாஜி ஆகியோரின் நினைவாலயங்களுக்கும் சென்று அஞ்சலி செலுத்தினர்.

### மெரினாவில் பொதுக்கூட்டம்

இதனிடையே, தமிழ்நாட்டில் அ. இ. அ. தி. மு. கழகம் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ளதைத் தொடர்ந்து இன்று இரவு சென்னை மரினா கடற்கரையில் பிரமாண்டமான வெற்றி விழாக்கூட்டம் நடைபெற்றது. பல லட்சக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்தைச் சமாளிப்பதில் பொலிஸார் பெரும் சிரமப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது. தமிழகத்தின் நாலா பகுதிகளையும் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான கிராமப்புறமக்களும் வீரஉணர்ச்சியுடன் இவ்வெற்றிவிழாவில் கலந்துகொண்டனர்.

### ராஷ்டிரபதி ஆட்சி நீங்கியது

தமிழகத்தில், அ. இ. அ. தி. மு. கழக ஆட்சி இன்று பொறுப்பேற்றதைத் தொடர்ந்து தமிழகத்தில் அமுலில் இருந்த ராஷ்டிரபதி ஆட்சி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. 1976-ம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ம் திகதி தமிழ்நாட்டில் ராஷ்டிரபதி ஆட்சி அமுல்செய்யப்பட்டது இங்குகுறிப்பிடத்தக்கது.

### எம். ஜி. ஆர். புதுடில்லி செல்கிறார்

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். நாளை 2-ந் திகதி புதுடில்லி செல்கிறார் புதுடில்லியில் பிரதம மந்திரியுடனும் மற்றும் அமைச்சர்களுடனும் எம். ஜி. ஆர். பேச்சுவார்த்தை நடத்துவார்.

### பாண்டிச்சேரியில்

தமிழ்நாட்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று, இன்று பதவியேற்றுக்கொண்ட அ. இ. அ. தி. மு.கழகம், பாண்டிச்சேரியில் ஆட்சியை அமைக்க இன்று தவறி விட்டது. ஆனாலும், எதிர்வரும் சனிக்கிழமை 2-ம் திகதி தமது கட்சி பதவியேற்குமென்று அ. இ. அ. தி. மு. கழக சட்டசபைத்தலைவர் திரு. எஸ். இராமசாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார். [6ம் பக்கம் பார்க்க]

## "மாநில - மத்தியில் சுமுக உறவுகள்"

### முதல்வர்எம்.ஜி.ஆர். செய்தி

"மாநில அரசுக்கும் மத்திய அரசுக்குமிடையே சுமுகமான உறவு நிலவும். இதில் எந்தவித சந்தேகத்துக்கும் இடமில்லை" என்று தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சராக இன்று காலை பதவியேற்ற திரு. எம்.ஜி.இராமச்சந்திரன், பதவியேற்பு வைபவம் முடிவடைந்த சில நிமிடங்களில் பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

"அண்ணாவின் அறவழியில் தமிழகத்தை எனது கட்சி வழி நடத்தும். இதற்கு மக்களின் பேராதரவு கிடைக்கும்" என்றும் தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

## ஆசிரியர்கள்இன்று

### யாழ். நகரில் கூடுகின்றனர்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை ஆசிரிய சங்கத்தின் 20 வது வருடாந்த மகாநாடும் பிரதிநிதிகள் சம்மேளனக் கூட்டமும் இன்றும் நாளையும் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறுகிறது. இவ் விழாவையொட்டிப் பொருட்காட்சியும் புத்தகக் கண்காட்சியும் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் நடைபெறும். [6ம் பக்கம் பார்க்க]

### மணிவாக்கு

மனிதனுக்கு உண்மையான பகை, காமம், கோபம், பற்று, மதுபானம், பெருமிதம், துன்பம் என்பனவாகும். அவைகளை வென்றால் ஏனைய பகைகளை இலகுவாய் வெல்லலாம். — மகாத்மாகாந்தி.

ஈழநாடு
THE EELANAADU

## எம். ஜி. ஆர். அரசு

தமிழகத்தில் திரு. எம். ஜி. ராமச்சந்திரனை முதலமைச்சராகக் கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முற்னேற்றக் கழக அமைச்சரவை நேற்றுப் பதவியேற்றிருக்கிறது.

பாண்டிச்சேரியிலும் எம். ஜி. ஆரின் அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தின் ஆட்சியே மலர்ந்திருக்கிறது.

தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் எம். ஜி. ஆர். இரண்டு விரலைக்காட்டியதற்கு அச்சமயத்தில் என்ன அர்த்தமிருந்தாலும் இப்போது அதற்கு "இரண்டு மாநிலங்களிலும் எனது ஆட்சிதான்" என்று அவர் சைகை மூலம் சொன்னதாக இன்று அர்த்தம் கூறி அவரது ஆதரவாளர்கள் பெருமை கொள்ளலாம்.

பாண்டிச்சேரியில் அனைத்திந்திய அ. தி. மு. கழகமே அதிக ஆசனங்களைப் பெற்ற தனிக்கட்சியாக விளங்கிய போதும் ஸ்திரமான அரசாங்கம் அமைக்கும் பலம் அதற்கு இருக்கவில்லை. காங்கிரசுடன் கூட்டுச்சேர்ந்து அரசாங்கம் அமைக்குமா ஜனதா கட்சியுடன் கூட்டுச் சேருமா அல்லது சுயேச்சையின் ஆதரவுடன் அமைச்சரவையை அமைக்குமா என்பது இன்னமும் நிச்சயமாகவில்லை.

எப்படியும் பாண்டிச்சேரியில் புதிய மந்திரிசபை நாளை சனிக்கிழமை பதவியேற்குமென்பது நிச்சயம் என்று அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகம் தெரிவித்துள்ளது.

தமிழகத்திலும் பாண்டிச்சேரியிலும் அரசு கட்டிலில் அமரும் எம். ஜி. ஆர். தலைமையிலான அனைத்திந்திய அண்ணா தி. மு. கழகத்தை உலகில் பல நாடுகளிலும் பரந்து வாழும் தமிழ்பேசும் மக்களுடன் நாமும் சேர்ந்து வாழ்த்துகிறோம்.

தமிழகத்தில் நேற்று பதினன்கு அமைச்சர்கள் பதவியேற்றிருக்கிறார்கள். இது பூரணமான மந்திரிசபையல்ல. மற்றொரு பட்டியல் விரைவில் அறிவிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நடந்து முடிந்த தேர்தலில் எம். ஜி. ஆரின் கட்சிக்கு தனியாக மந்திரிசபை அமைக்கக்கூடிய அறுதிப் பெரும்பான்மைப் பலத்தை தமிழக மக்கள் அளித்திருக்கின்றனர்.

ஆனாலும் இந்தப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறுவதற்கு ஒத்துழைத்த தேர்தல் கூட்டுக் கட்சிகளான மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய முஸ்லிம் லீக் ஆகியவைகளின் ஆதரவைத் தொடர்ந்தும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வைத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கலாம்.

நேற்றுப் பதவியேற்ற தமிழக அமைச்சரவையில் ஒரு பெண்ணும், ஒரு இஸ்லாமியரும் இடம்பெற்றுள்ளனர். பொதுவாக இந்த அமைச்சர்களில் பெரும்பாலானவர்களும் முன்பு அதிகம் கேள்விப்படாதவர்களே முக்கியமான பொலிஸ், பாதுகாப்பு, உள்துறைப் பொறுப்புக்களை எம். ஜி. ஆரும், நிதியமைச்சை அவரது சகபாடி நாஞ்சில் கே. மனோகரனும் ஏற்றுள்ளனர். துடிதுடிப்புள்ளவர்களையே முதல்வர் எம். ஜி. ஆர். தமது அமைச்சரவைக்குத் தெரிவுசெய்துள்ளதால தமிழ்நாடு அரசு சுறுசுறுப்பாகச் செயல்படுமென்று எதிர்பார்க்கலாம்.

தேர்தல் காலத்தில் எம். ஜி. ஆர். வெளியிட்ட திட்டங்கள் பிரமாதமானவை. அவற்றைச் செயல்படுத்துவதற்கு நிறைய நிதி தேவை.

இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மத்திய அரசினது உதவியும் ஒத்துழைப்பும் மட்டுமல்ல, தமிழகத்திலுள்ள இதர கட்சிகளின் உதவியும் ஒத்துழைப்பும் தேவை இவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு எம். ஜி. ஆர். முயற்சி செய்வார் என்று நம்பலாம்.

# 'ஆக்கிரமித்த பகுதியை மீட்பது அநீதியாகுமா?'

### — அ. அமிர்தலிங்கம்

கொழும்பு, வியா

"நாம்யாரிடமிருந்தும் எதையும் பறிக்கவரவில்லை. யாருடனும் பகைமை கொண்டு இங்கு போட்டியிடவில்லை. 3 அங்கத்தவர் தொகுதியான இத்தொகுதியில் ஓர் அங்கத்துவம் எங்களுடையது. ஆனல் கடந்த 30 வருடங்களாக எம்மிடையே ஒற்றுமை ஏற்படத் தவறியதால் அதை பிறர் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். நாம் இப்போது ஒன்றுபட்டு விட்டோம்; நம்முடையதை நாமே பெறமுனைந்து விட்டோம். சொந்தக்காரன் வந்தால் விட்டுவிடவேண்டியது தான். ஆக்கிரமிப்பை மீட்பது அறம்- சிந்திக்கும் ஆற்றல் படைத்த எவராவது இது நீதியற்றது என்று சொல்வார்களா?"

கொழும்பு மத்திய தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவுடன் போட்டியிடும் இ. தொ. கா. வேட்பாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமியை ஆதரித்து ஜிந்துப்பிட்டி மைலன் தியேட்டருக்கு அருகாமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலதிபர்களில் ஒருவரான திரு. அ. அமிர்தலிங்கம் இவ்வாறு கேட்டார்.

பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்ட இக்கூட்டத்திற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரும், இ. தொ. கா தலைவருமான திரு. சௌ. தொண்டமான் தலைமை வகித்தார்.

தார்கள். இப்போது நம்மிடையே சரித்திரம் காணுத ஒற்றுமையை நமது மறைந்த தலைவர்கள் ஏற்படுத்தியிருக்கிறார்கள்; இந்த ஒற்றுமையின் மூலம் நமக்கே உரியதை நாம் பெறமுனைந்துவிட்டோம்.

### மலையகத் தொழிலாளர்

"நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் இன்றுவரை இந்நாட்டிலுள்ள மலையகத் தொழிலாளர் நிலையை நாம் சிந்திக்க வேண்டும். அந்நியச் செலாவணியில் 60 வீதத்துக்கு மேல் ஈட்டும் இராமசாமியும், மீனுட்சியும் கள்ளத்தோணிகள் என்றும் நாடற்றவர்களாகவும் ஆக்கப்பட்டார்கள். குடியுரிமை, வாக்குரிமை மாத்திரமன்றி குடியிருக்கும் உரிமை கூட அவர்களுக்கு இன்று இல்லை. மலையகத்தமிழருக்காக 6 தொகுதிகளை ஒதுக்கும்படி நாம் தொகுதிநிர்ணயக் குழுவிடம் கோரினேம். ஆனல் ஒரு தொகுதிமட்டும்தான் வழங்கப்பட்டது. தமிழர் அதிகமாக வாழும் கொழும்பு மேற்குத் தொகுதியை இரட்டைஅங்கத்தவர் தொகுதியாக்குமாறு கேட்டோம்; அதுவும் கிடைக்கவில்லை.

### கெனமனுக்கு பதில்

"நாம் ஏன் கொழும்புவடக்கில் போட்டியிடாது, கொழும்பு மத்தியில் மாத்திரம் போட்டியிடுகிறோம் என்று தோழர் பீட்டர் கெனமன் கேட்டிருப்பதை நான் பத்திரிகையில் பார்த்தேன். தனி அங்கத்தவர் தொகுதி எதிலும்

யகத்தின் உச்சியில் நாரா ளைமஸ்கெலியாவிலும் சேவல் சிறகடித்துக்கூவ, புத்தளத்திலிருந்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உதயசூரியன் எழுவான்; நம்மைக்கப்பியுள்ள அடிமை இருள் அகலும்; நாம் சுபீட்சமாக வாழ்வோம்; நாளை நமதே" என்று கூறி முடித்தார் திரு. அமிர்தலிங்கம்.

### சிவா பேச்சு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மற்றைய செயல் அதிபரான திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில் கூறியதாவது: "தனக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தமிழன் பரிகாரம் காணத்தீர்மானித்துவிட்டான்என்பதைஎதிர்வரும் பொதுத் தேர்தல் மூலம் உலகுக்கு உணர்த்துவோம்.

திரு. செல்லச்சாமியின் தேர்தல் அலுவலகத்தில் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலத்தின் உருவப்படம் இல்லை என்றும், எனவே காங்கிரஸ் ஆதரவாளர்கள் திரு. செல்லச்சாமியை எப்படி ஆதரிப்பது என்றும் திரு. பீட்டர்கெனமன் கேட்பதாக பத்திரிகையொன்றில் செய்தி வெளியாகியிருக்கிறது. திரு. பீட்டர் கெனமனுக்கு தலைவர் ஜி. ஜி. யிடம் இவ்வளவு பாசம் திடீரென வந்ததோ தெரியவில்லை. இத்தகைய பூச்சாண்டிகளை கருத்தில் கொள்ளவேண்டாம். தலைவர் ஜி. ஜி.க்கு பிறகு தமிழ்க் காங்கிரஸின் தலைவரான நான் கூறுகிறேன், காங்கிரஸ் ஆதரவாளர்கள் - ஜி. ஜி. ஆதரவா

# "மலையகத் தமிழனின் குரல் பேரவையில் ஒலிக்கும்"

### — எஸ். செல்லச்சாமி

"தமிழன் யாரையும் நசுக்க விரும்பாதவன்; யாரையும் அடக்கியாள விரும்பாதவன்; யாரிடமிருந்தும் எதனையும் பறித்துவிட விரும்பாதவன்; ஆனல், தன்னை யாரேனும் நசுக்குவதை-தன்னையாரேனும் அடக்கியாள்வதை - தன்னிடமிருந்துளதனையும்பிறர்பறித்து விடுவதையும் அவன் விரும்பாதவன்" என்று அறிஞர் அண்ணாவின் வாசகத்தை நினைவுபடுத்திய திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

### அறிக்கையில் உள்ள விபரம்

"சோல்பரி அரசியல்திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்குமாகாணங்களிலிருந்து 15 தமிழர்களும், மலையகத்திலிருந்து 14 இந்திய வம்சாவளித் தமிழரும் பிரதிநிதித்துவம் பெறத்தக்க வகையில் 1947ம் ஆண்டின் தொகுதிநிர்ணயக்குழு அறிக்கை வெளியிட்டது. கொழும்பு மத்தியதொகுதியை சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் ஆகிய மூன்று இனத்தவரும், தத்தமக்கொரு பிரதிநிதியைத் தெரிவு செய்வதற்காக 3 அங்கத்தவர் தொகுதியாக அந்தத்தொகுதி நிர்ணயசபை சிபார்சு செய்தது; இந்த அடிப்படையிலேயே இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது.

"ஆனல், கடந்த 30ஆண்டுகளாக நம்மிடையே ஒற்றுமை ஏற்படத் தவறியதால் ஒருதமிழனுவது இத்தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்படவில்லை. நமக்கு உரியதை, இதுவரை (ஏ) காலமும் பிறர் அனுபவித்துவந்

சிறுபான்மை இனம் வெற்றி பெறமுடியாது. சிறுபான்மை இனங்களும் தமது பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதற்காகவேதான் இரட்டை அங்கத்தவர் தொகுதி, 3 அங்கத்தவர் தொகுதிகள் அமைக்கப்படுகின்றன என்பதை தோழர் கெனமனுக்கு நான் சொல்லி வைக்கிறேன்.

"தோட்டக்காட்டுசசாமிக்கு இங்கு என்னவேலை?" என்றும் கேட்கிறாராம் திரு. கெனமன். இது அவருடைய வடிகட்டிய வகுப்புவாதத்தையே காட்டுகிறது. நாம் மதபேதமின்றி, சாதிபேதமின்றி வேட்பாளர்களை நிறுத்தியிருக்கிறோம். ஒரு சாதாரணமலையகத் தோட்டத் தொழிலாளியின் மகனைக் கொழும்புமத்தியில் ஆதரிக்கிறோம்.

"புத்தளம் உட்படவடக்கு, கிழக்கு மாகாணங்களில் சகல தொகுதிகளிலுமே நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம் இதை நான் நன்கு நிலைமையை அவதானித்தே கூறுகிறேன். சில இடங்களில் நிலைமை கஷ்டம் என்பது வெறும் சலசலப்பே. இதில் உண்மையில்லை. எனவே தங்கள் சொந்தத் தொகுதியிலும், கொழும்பு மத்தியிலும் வாக்குரிமைபெற்ற வர்த்தகப் பெருமக்கள் கொழும்புமத்தியிலேயே உங்கள் வாக்குகளை அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நமது ஒற்றுமையை உரிமைக் குரலை உலகுக்கு உணர்த்த - மலையகத் தமிழர்களுக்கு வாழ்வளிக்ககொழும்பு மத்தியை நாம் வென்றெடுக்க வேண்டும்.

'கொழும்புமாநகரிலும், மலை

ளர்கள் திரு. செல்லச்சாமியையே ஆதரியுங்கள்.

"1947 தொடக்கம் சிறுபான்மை மக்களின் வாக்குகளைப்பெற்றே கொழும்புமத்தியில் வெற்றிபெற்ற திரு. பீட்டர் கெனமன், சிறுபான்மைமக்களின் உரிமை மறுக்கப்பட்ட குடியரசுப்பிரகடனத்துக்குஆதரவாகவேஇருந்தார். 30ஆண்டுகளுக்குப் பிறகு நம்மை நாமே பிரதிநிதித்துவம் செய்யமுடிவு கட்டிவிட்டோம். அந்தப் பாக்கியத்தை மலையகத்தமிழருக்கு அளிப்போம்."

### 'உரிமை இழந்த முஸ்லிம்கள்'

தமிழர் விடுதலைக் கூட்டணியின் புத்தளம் வேட்பாளர் டாக்டர் இலியாஸ் பேசுகையில்; "இந்நாட்டில் முஸ்லிம்கள் தங்கள் உரிமைகள் நசுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கிறார்கள். இதனை முஸ்லிம் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். கடந்த ஆண்டில் முஸ்லிம்கள் மீது 229 தாக்குதல் சம்பவங்கள் நடைபெற்றன. 44 கடைகள் சேதப்படுத்தப்பட்டன. 2 பள்ளிவாசல்கள் சேதப்படுத்தப்பட்டன. மொழிபறிக்கப்பட்டது. குடியிருக்கும் காணிகள் பறிக்கப்பட்டன. மதம் மூன்ருவது நிலைக்குத் தள்ளப்பட்டது. இத்தனைக்கும் பதிெருரு முஸ்லிம் எம். பி.க்கள் பேரவையில் மௌனிகளாகவே இருந்தார்கள் நிலம் இழந்து, உரிமையிழந்துவாழும் முஸ்லிம்களுக்கு முஸ்லிம் தலைவர்களாக இருந்தவர்களால் எவ்வித பயனும்

(6-ம் பக்கம் பார்க்க)

# "சுதந்திர தமிழ் ஈழம் நிறுவ வேண்டும்"

சாவகச்சேரி, வியா.

'கடந்த நானூறு வருடங்களாக அடிமையாக வாழ்ந்த தமிழினம் புத்தொளிபெற்று சுதந்திர இனமாக ஏனைய நாடுகளுடன் தலைநிமிர்ந்து சமத்துவமாக வாழ வேண்டுமா இல் தமிழர்களின்ஒன்றுபட்ட ஒத்துழைப்பு வேண்டும்"

சாவகச்சேரியில் போட்டியிடும் தமிழ் ஈழ அரசுக் கழகத் தலைவர் திரு. சதா. நடராசா மீசாலையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. எம். சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் திரு சதா நடராசா பேசும் போது மேலும் கூறியதாவது: 'நம்நாட்டில் சுதந்திர ஈழம் ஒன்று உதயமாகி நம்மை நாம் ஆளவேண்டும். எமது நிலத்தில் ஒரு சிறுபகுதியேனும் பிறர் கையில் போகாது காப்பாற்ற வேண்டும் எமது கலை கலாச்சாரம் மதம் என்பவற்றை நாம் காப்பாற்ற அரசியல் தலைவர்கள் பொதுமக்களை பங்காளிகளாக்கி தமது முழுநேரத்தையும் அரசியல் தொண்டில் ஈடுபடுத்த வேண்டும்.

திரு. எஸ் கனகசபாபதி திரு. வி. நாகேந்திரன் ஆகியோரும் பேசினர்.

### ஆலயப் பிரவேசம்

யாழ்ப்பாணம், வெள்ளி

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள தொல்புரம் வழக்கம்பரைமுத்துமாரியம்மன் கோவிலில் சிறுபான்மை தமிழ்மக்கள் அமைதியாக ஆலயப் பிரவேசம் செய்தனர். தேர்த்திருவிழாவன்று நடைபெற்ற இந்நிகழ்ச்சி பெரும்பான்மை மக்களின் ஆதரவுடன் கட்சி சார்பற்ற முறையில் நடந்தது.

# பதினன்கு பேரடங்கிய மந்திரிசபைப்பட்டியலை

# எம். ஜி. ஆர். சமர்ப்பித்தார்

## புதுச்சேரி இராமச்சந்திரன் மீண்டும் அனைத்திந்திய அண்ணு தி. மு. க.வில்

சென்னை, ஜூன் 30

அனைத்திந்திய அண்ணுதிராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் தாம் உட்பட 14 பேர் அடங்கிய தமது மந்திரிசபைப் பட்டியலை நேற்றிரவு 10-30 மணிக்கு தமிழ்நாடு ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரியிடம் சமர்ப்பித்தார். திரு எம். ஜி. ஆர், பொலிஸ், மதுவிலக்கு, சுகாதாரம், பொது நிர்வாகம், தொழிலாளர் நலத்துறைகளை ஏற்றுள்ளார்.

இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதிபதி திரு. நாராயணசாமி முதலியார் சட்ட மந்திரியாகவும் அ. இ. அ. தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் திரு. நாஞ்சில் மனோகரன் நிதியமைச்சராகவும் இடம் பெற்றுள்ளனர். ஒரு பெண் மந்திரியும் இதில் இடம் பெற்றுள்ளார்.

### மந்திரிசபைப் பட்டியல்

திரு. எம். ஜி. ஆரின் மந்திரி சபை பட்டியல் வருமாறு,

திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (பொது நிர்வாகம், பொலிஸ், மதுவிலக்கு, சுகாதாரம், தொழிலாளர் நலத்துறைகள்), திரு. நாஞ்சில் மனோகரன் (நிதிமந்திரி), திரு. நாராயணசாமி முதலியார் (சட்டமந்திரி), திரு. எட்மண்ட் (உணவு மந்திரி), திரு. எஸ். ராமச்சந்திரன் (பொதுப்பணி மந்திரி), திரு. ஆர். எம். எம். வீரப்பன் (தகவல் மந்திரி), திரு. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்), திரு. காளிமுத்து (ஊராட்சி மந்திரி), திரு. பொன்னையன் (போக்குவரத்துமந்திரி) செல்வி பி. ரி. சரஸ்வதி (சமூகநல அமைச்சர்), திரு. குழந்தைவேலு (கலாச்சாரமந்திரி), திரு. ராஜா முகமது (ஜவுளிமந்திரி), திருவாளர்கள் ராகவானந்தம், சௌந்தரபாண்டியன் ஆகியோரும் அமைச்சர் பதவிபெற்றுள்ளனர்.

இரண்டாவது பட்டியல் பின்னர்அறிவிக்கப்படுமென்று திரு எம். ஜி ஆர். தெரிவித்தார்.

### முதல் கூட்டம் இன்று

தமதுமந்திரிசபையின் முதல் கூட்டம் நாளை நடைபெறும் என்று அவர் மந்திரிசபைப் பட்டியலை ஆளுநரிடம் சமர்ப்பித்தபின் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் கூறினர்.

### புதுச்சேரியில்

தெரிவான [illegible] இருக்க, புதுச்சேரியிலும் அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக்கழகம் ஜனதாகட்சி ஆதரவுடன் ஆட்சியமைக்கவிருக்கிறது.

திருவாளர்கள் எஸ். இராமசுவாமியும், டி. இராமச்சந்திரனும் இன்று புதுச்சேரி மந்திரிகளாகப் பதவி ஏற்பர் என்று திரு எம். ஜி. ஆர். சென்னையில் நேற்றுத்தெரிவித்தார்.

தமது கட்சியில் இருந்து ராஜினமாச்செய்த திரு. டி. இராமச்சந்திரன் மீண்டும் தம்முடன் சேர்ந்து கொண்டதாகவும் அவர் கூறினர்.

சென்னையில்திரு. இராமசுவாமியையும் திரு. இராமச்சந்திரனையும் தாம்நேற்று அழைத்து பேச்சுவார்த்தைநடத்தியதனையடுத்து திரு. இராமச்சந்திரன் மீண்டும் இணைந்துகொண்டதாக திரு. எம். ஜி. ஆர். கூறினர்.

இதேசமயம், புதுச்சேரியின் புதியமந்திரிசபையை அமைக்க வருமாறு திரு. இராமசுவாமிக்கு புதுச்சேரி லெப்டினன்ட் கவர்னர் குல்காணி அழைப்புவிடுத்துள்ளார்.

புதுச்சேரியில் அ. இ. அ. தி. மு. கவுக்கு மொத்தம் 30 இடங்களில் 15 இடங்கள் உள்ளன. மாகே தொகுதி சுயேச்சை உறுப்பினரும் ஆதரவளிக்க முன்வந்ததனையடுத்து இத் தொகை அ. இ. அ. தி. மு. கவுக்கு கிடைத்துள்ளது.

ஜனதாகட்சிக்கு புதுச்சேரி சட்டசபையில் எட்டு இடங்கள் உள்ளன.

புதுச்சேரி முதலமைச்சராகப் பதவியேற்கவிருக்கும் திரு. இராமசுவாமி இரண்டாவது தடவையாக இங்கு இப்பதவியை வகிக்கவிருக்கிறர்.

திரு. இராமசுவாமி கடந்த 1974-ம் ஆண்டில் அ. இ. அ. தி. மு. க. சொற்பகாலம் ஆட்சி நடத்தியபோது முதலமைச்சராக புதுச்சேரியில் இருந்தார். [உ]

பூச்சிப் பொடுக்களை அழித்தொழித்து சிறந்த விளைச்சல் பெற பாவியுங்கள்




சர்வதேச நெற்பயிர் ஆராய்ச்சி நிலயத்தால் மேற்கொள்ளப்பட்ட நுணுக்க ஆய்வுகளின் நிமித்தம், இன்று சந்தையில் பெறக்கூடிய மிகச்சிறந்த பூச்சி பொடுக்கள் கொல்லி **பக்ஸ்.**

இது மொனிட்டர் 600 தயாரித்தோரான ஷெவ்ரொன் கம்பனி லிமிட்டெட்டின் மற்றும், ஓர் தயாரிப்பு.

உங்களுக்கு அண்மையிலுள்ள வர்த்தகரிடம் அல்லது எம்மிடம கிடைக்கும்.

**ஹரிசன்ஸ் அன்ட் குரொஸ்பீள்ட்**
**(கொழும்பு)**
டார்லி ரோட், கொழும்பு —10.

## கலஹாவில் ஏற்பட்ட பெரும் தீ விபத்து!

கலஹா, வியா.

நேற்று முன்தினம் கலஹாவில் ஏற்பட்டபெரும் தீ விபத்தில் பல்லாயிரக் கணக்கான ரூபா சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இத் தீவிபத்தினுல், மூன்று கார்களும், ஒரு நெற்குத்தும் ஆலையும், மற்றும் ஒரு கராஜிலுள்ள பல சாதனங்களும் சேதமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

கலஹா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியின் துரித நடவடிக்கைகளினல் இத் தீ மேலும் பரவவிடாமல் கட்டுப்படுத்தப்பட்டது.

## கென்யாமீது சோமாலி தாக்குதல்: 13 பேர் பலி

நைரோபி, ஜூன் 30

சோமாலித் துருப்புகள் கென்யா கரையோரத் துருப்புகள் மீது நடத்திய திடீர் தாக்குதலினல் 13 பேர் உயிரிழந்தனர் என்று நைரோபி செய்திகள் தெரிவிக்கின்றன.

சோமாலிக்கும் – கென்யாவுக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட எல்லைப்பிரச்னை தொடர்பான உடன்படிக்கையின்பின் நடைபெற்ற மிக மோசமான தாக்குதல் இது என தெரிவிக்கப்படுகிறது.

எத்தகைய நடவடிக்கைகளையும் தாம் சந்திக்கத் தயாராக இருப்பதாக கென்யா அறிவித்துள்ளது. [உ]

## சீனவுக்கு நேசக்கரம் நீட்டுகிறது அமெரிக்கா

வாஷிங்டன், ஜூன் 30

சீனவுடன் பரஸ்பர நட்புறவையும், ஒத்துழைப்பையும் கரிக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது.

இதுதொடர்பாக அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. சைரஸ் வான்ஸ் சீனஅரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஆசிய பசுபிக் வல்லரசாகஅமெரிக்காதிகழவே விரும்புகிறது என்றும் திரு. சைரஸ் வான்ஸ் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுடன் வர்த்தக உறவுகளை விருத்தி செய்து கொள்ள அமெரிக்கா விரும்புகிறது என்றும் அவர் சொன்னர். (உ)

## அணிசேரா நாடுகள் மாநாடு பெல்கிரேட்டில் ஆரம்பம்

லண்டன், ஜூன் 30

இலங்கை, பாரதம், கியூபா, இந்தோனேஷியா உட்பட ஆறு அணிசேரா நாடுகள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று இன்று பெல்கிரேட்டில் ஆரம்பமாகியது.

ம.கி. பிரச்னை, கொழும்பில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பலாபலன்கள் அணிசேரா நாடுகளுக்கு இடையேயான நிதி ஒத்துழைப்பு விஷயம் என்பன இம்மாநாட்டில்ஆராயப்படுமெனத் தெரிய வருகிறது. (உ)

மொஸாம்பிக்கிற்கு

## ஆபிரிக்க - மேற்கு நாடுகள் ஆதரவு

நியூயோர்க், ஜூன் 30

மொஸாம்பிக்கிற்குள் ரொடீஷிய ஊடுருவல் குறித்து மொஸாம்பிக்கின் நிலையைப் பலப்படுத்தவேண்டும் என்று ஆபிரிக்கநாடுகள் பாதுகாப்புச் சபையைக்கோரியுள்ளன.

### ரொடீஷியா குற்றச்சாட்டு

இதேவேளை மொஸாம்பிக் மீது ரொடீஷியா குற்றஞ் சாட்டியுள்ளது.

அத்துமீறி ஊடுருவல் செய்வது மொஸாம்பிக்தான் என்றும் சமீபத்தில் நடைபெற்ற 102 சம்பவங்களுக்கும் மொஸாம்பிக்தான் காரணம் என்றும் ரொடீஷியா குற்றஞ் சாட்டியுள்ளது.

ரொடீஷிய ஆக்கிரமிப்பை தடுக்க அதிகமான அளவில் இராணுவ உதவிகள் வழங்கப்படவேண்டும் என்றுமொஸாம்பிக், ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையைக் கேட்டுள்ளது.

மொஸாம்பிக்கில் ரொடீஷிய துருப்புகள் அத்துமீறி ஊிபிரவேசித்து தாக்குதல்கள் நடத்தி வருவதாகவும் இதுபற்றி நடவடிக்கை எடுக்க பாதுப்புச் சபை உடனடியாகக் கூட்டப்படவேண்டும் என்றும் மொஸாம்பிக் வலியுறுத்தியிருக்கிறது. (உ)

### "பலஸ்தீன தாயகம்"

லண்டன், ஜூன் 30

மத்திய கிழக்குப் பிரச்னை தீர 'பலஸ்தீனதாயகம்' ஒன்று ஏற்படுத்தப் படவேண்டும் என்று ஐரோப்பிய பொதுச் சந்தை நாடுகள் கூறியுள்ளன.

கோரிக்கைக்கு

## இணங்காவிடில் மீண்டும் ஆர்ப்பாட்டம் நடக்கும்

### பாக். அரசிடம் எதிரணி

இஸ்லாமாபாத், ஜூன் 30

பாகிஸ்தானில் மீண்டும் பொதுத் தேர்தலை அக்டோபர் மாதத்தில் நடத்துவதற்கு பாகிஸ்தான் எதிர்க்கட்சிக் கூட்டணி பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு இன்று வரை அவகாசம் அளித்துள்ளது.

இக்கோரிக்கைக்கு பதிலளிக்கப்படாது இது நிராகரிக்கப் படும்பட்சத்தில் எதிர்க்கட்சிக் கூட்டணி வீதிகளில் மீண்டும் ஆர்ப்பாட்டங்களை அரசாங்கத்திற்கு எதிராக நடத்தும் என்று எதிர்க்கட்சிக் கூட்டணி அதிகாரிகளில் ஒருவர் தெரிவித்தார். (உ)

எம், பி.யாவது எப்படி?

# உயர்நீதிமன்ற ஆட்சேபனைகள்

## இந்த ஆட்சேபனையை எப்படி உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துவது?

எப்படி ஆற்றுப்படுத்துவது என்று 31-ம் பிரிவின் (7) ஆம் உட்பிரிவு கூறுகின்றது:-

(1) அத்தகைய ஆற்றுப்படை (Reference) எழுத்திலான மனுவின்மூலம், செய்யப்படுதல் வேண்டும்; இதற்கு முத்திரைக் கட்டணம் கிடையாது.

(2) நியமனத்தேதிக்குப்பின்னர்மூன்றுநாட்களுக்குள் உயர்நீதிமன்றத்துக்கு ஆற்றுப்படுத்துதல் வேண்டும்.

## சட்டமும் சமுதாயமும்

(3) தேர்தற் பொறுப்புத்தியோகத்தர், ஆட்சேபித்தவர் சம்பந்தப்பட்ட வேட்பாளர் ஆகியோரதுபெயர்களையும் முகவரிகளையும் குறிப்பிடுதல்வேண்டும்.

(4) ஆட்சேபனைக்கு ஆதாரமாயுள்ள ஆவணங்களின் பிரதிகளோடு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) இந்த ஆற்றுப்படை, அது உயர்நீதிமன்றத்தைச் சென்றடைந்த தேதியிலிருந்து 10 நாட்களுக்குள், சுருக்க முறை விசாரணையொன்றின் பின்னர், உயர்நீதிமன்ற நீதிபதியொருவரால், கேட்கப்பட்டுத் தீர்மானிக்கப்படும்.

மேற்படி உயர்நீதிமன்ற நீதிபதியால் கொடுக்கப்படும் தீர்ப்பு, முற்றும் முடிவும் ஆனதாக இருக்கும். உயர்நீதிமன்றத் தீர்ப்பு, கிளப்பப்பட்ட ஆட்சேபனையை ஏற்றுக்கொள்வதாக அமைந்தால், சம்பந்தப்பட்ட வேட்பாளரின் நியமனப்பத்திரம் நிராகரிக்கப்பட்டதாகக் கருதப்படும்.

## வேட்பாளர் நியமனப் பத்திரத்தைச் சமர்ப்பித்தபிறகு போட்டியிலிருந்து ஒதுங்கலாமா?

ஒதுங்கலாம்; ஆனல் நியமனத்தேதியிலிருந்து காலை பதினொரு மணிக்கு முன்பு, போட்டியிலிருந்து தாம் விலகப்போவதாகக் கூறும் எழுத்திலானதும் ஒப்பமிடப்பட்டதுமான அறிவித்தலை தேர்தற்பொறுப்புத்தியோகத்தரிடம் ஒப்படைப்பதன்மூலம் போட்டியிலிருந்து ஒதுங்கிக்கொள்ளலாம். பதினொருமணி கடந்துவிட்டால், வேட்பாளர் எவரும் தமது வேட்பான்மையை (Candidature) கைவாங்கமுடியாது. (பிரிவு 33) அப்படி ஒருவர்பதினொருமணிக்குள் தமது வேட்பாண்மையைக் கைவாங்கினல் தேர்தற் பொறுப்புத்தியோகத்தர் அத்தகைய வேட்பான்மை கைவாங்கும் அறிவித்தலை (Notice of withdrawal of Candidature) நியமன இடத்துக்கு வெளியேதுலாம்பரமான ஓரிடத்தில் போடுவித்தல்வேண்டும்

## நியமனத் தேதியன்று பிற்பகல் 1 மணிக்கு முன்னர் கட்டுப்பணம் செலுத்தப்படாவிட்டால்?

கட்டுப்பணத்தைக் கட்டிய பின்னர்தான் நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பிக்கவேண்டும் என்ற நியதிஇல்லை என்று இந்தக் கட்டுரைத் தொடரில் வேருேரிடத்தில் கூறியுள்ளோம். நியமனப்பத்திரத்தைச் சமர்ப்பித்த பின்னரும் கட்டுப்பணத்தைச் செலுத்லாம் என்று இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் அரசப் பேரவைக் கட்டளையின் 29 (1) ஆம் பிரிவு கூறுகின்றது. அதாவது நியமன நாளன்று பிற்பகல் ஒருமணி வரை கட்டுப்பணத்தைச் செலுத்தமுடியும் என்று அந்தப்பிரிவு கூறுகின்றது. ஒரு மணிக்கிடையில் கட்டுப்பணம்

—செ.சிறீக்கந்தராசா—
(சட்டத்தரணி

செலுத்தப்படாவிட்டால் அத்தகைய வேட்பாளர் தமது வேட்பான்மையைக் கைவாங்கிவிட்டவராகக் கருதப்படுவார். அதாவது அவர் தேர்தலில் போட்டியிடாமல் ஒதுக்கிவிட்டவராகக் கொள்ளப்படுவார்.

## போட்டியுள்ள தேர்தலா? (பிரிவு 35) போட்டியற்ற தேர்தலா? (பிரிவு 34)

நடைபெறவுள்ள தேர்தல் போட்டியற்ற தேர்தலா போட்டியுள்ள தேர்தலா என்பது நியமனத் தேதியன்றே தெரிந்துவிடும். இலங்கையில் பெரும்பாலான தொகுதிகள் ஒருறுப்பினர்த் தொகுதிகளே. ஒருசில மட்டுமே பல்லுறுப்பினர் தொகுதிகளாக (ஈருறுப்பினர்த் தொகுதி அல்லது மூவுறுப்பினர்த் தொகுதி) உள்ளன. உதாரணமாக, கொழும்பு மத்தி, மட்டக்களப்பு, பொத்துவில், நுவரெலியா, மஸ்கெலியா, பேருவலை, ஹரிஸ்பத்து ஆகிய தொகுதிகளைக் குறிப்பிடலாம்.

[தொடரும்]



## புதிய தலைவர்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரத்தைச் சேர்ந்த திரு. மு. தம்பிஐயா ஆசிரியர், பண்டத்தரிப்பு மீன்பிடிக் கூட்டுறவுச் சங்கத் தலைவராக அரசாங்கத்திஞல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். சுழிபுரம் திருவடிநிலை தமிழ்க்கலவன் பாடசாலை உதவி ஆசிரியராகக் கடமையாற்றும் இவர், சுழிபுரம் மேற்கு கலைமகள் சன சமூக நிலையத் தலைவராகவும், சுழிபுரம் கிராம முன்னேற்றச் சங்க உபசெயலாளராகவும், சுழிபுரம் ஐயனர் கோயில் திருப்பணிச் சபைத்தலைவராகவும் மற்றும் பல பொது இயக்கங்களின் நிர்வாகியாகவும் பணியாற்றி வருகின்ருர்.

## உடையார்கட்டு வித்தியாலய பெ. ஆ. சங்கம்

உடையார்கட்டு, வியா.

உடையார் கட்டுச்குளம், அ. த. க. வித்தியாலயத்தின் பெற்ருர் ஆசிரிய சங்கப் பொதுக்கூட்டம் வித்தியாலய அதிபர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அதிபர் தமது தலைமை உரையில் விததியாலயம் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றியும், தொடர்ந்து வளர்ச்சி அடைவதற்கு வேண்டிய முக்கியதேவைகள் பற்றியும் குறிப்பிட்டார். உதவியாசிரியர் திரு.ம, ஆறுமுகம் பெற்ரேருக்கும்,ஆசிரியருக்கும் இருக்கவேண்டிய தொடர்பு பற்றி விளக்கிஞர். இதைத் தொடர்ந்து வித்தியாலயத்தின் முன்னேற்றம் கருதிப் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. திரு. க. குமாரசாமி நன்றி தெரிவித்துப் பேசிஞர்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர் களாகத்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. பொ. சங்கரப்பிள்ளை (அதிபர்), உபதலைவர்:- செல்வி. வ. கந்தையா (உ. ஆசிரியை), செயலாளர்:- திரு, க. குமாரசாமி, உபசெயலாளர்:- திரு. செ. குலவீரசிங்கம், பொருளாளர்:- திரு. ம. ஆறுமுகம் (உ. ஆசிரியர்)

நிர்வாகசபை உறுப்பினர். திருவாளர்கள்: ந. கந்தசாமி, செ. கிருஷ்ணபிள்ளை, சு. க. முருகேசு, ந. ஏகாம்பரம், திருமதி. கி. வல்லிமலர், அ. மாக்கிறெட்அம்மா, மே. யோ. இம்மானுவேல், திரு. வே. நடேசு. (அ)

## பொலிஸ் நிலையம் மீது தாக்குதல்

சென்னை, ஜூன் 30

சென்னை நகருக்கு சமீபமாகவுள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின்மீது ஒரு கோஷ்டி தாக்குதல் நடத்தியது.

இதனல் ஒரு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டரும், இரு கான்ஸ்டபிள்களும் மற்றும் 22 பேரும் காயமடைந்தனர்.

மேற்படி கோஷ்டிமீதுபொலிஸார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் எவரும் இறக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

லொறிச்சாரதி ஒருவரை பொலிஸார் தடுத்துநிறுத்தி சாரதி லைசென்சைக் கேட்டபோது அவர் அதற்கு மறுத்ததாகவும் இதன் எதிரொலியாக கலவரம் மூண்டதாகவும் கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக ஒரு சப் இன்ஸ்பெக்டரும் ஒரு கான்ஸ்டபிளும் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. (உ)

## 7 லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எலும்புக்கூடு

லண்டன், ஜூன் 30

வடகிரேக்கத்திலுள்ள குகை ஒன்றில் சுமார் 7லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென நம்பப்படும் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பாவைச் சேர்ந்த மனிதருடையது இந்த எலும்புக்கூடு என கருதப்படுகிறது. (உ)

## அமெரிக்கா - ரஷ்ய நட்புறவு

லண்டன், ஜூன் 30

அமெரிக்காவும் ரஷ்யாவும் பரஸ்பரம் நட்புறவை வளர்த்துக் கொள்ளும் முயற்சிகள் மேற் கொள்ளப் பட்டிருக்கின்றன.

மேற்படி நாடுகளின் தலைவர்கள் இது தொடர்பாகசந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தும் இடம், திகதி என்பன இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகின்றது. (உ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ். புற்றுநோய் சிகிச்சைநிலைய ஸ்தாபித நிதிக்காக

## ஈழநாடு

தேர்தல் 77 போட்டி பிரவேசப்பத்திரம்

### போட்டிக் கேள்விகள்

(1) கீழே தரப்படும் 23 தேர்தல் தொகுதிகளிலும் வெற்றிபெறும் வேட்பாளர்களைக் குறிப்பிடுக:-

| தொ.இல. | தொகுதி | வெற்றி பெறும் வேட்பாளர் |
|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | .................. |
| 80. | வட்டுக்கோட்டை | .................. |
| 81. | காங்கேசன்துறை | .................. |
| 82. | மானிப்பாய் | .................. |
| 83. | கோப்பாய் | .................. |
| 84. | உடுப்பிட்டி | .................. |
| 85. | பருத்தித்துறை | .................. |
| 86. | சாவகச்சேரி | .................. |
| 87. | நல்லூர் | .................. |
| 88. | யாழ்ப்பாணம் | .................. |
| 89. | கிளிநொச்சி | .................. |
| 90. | மன்னர் | .................. |
| 91. | முல்லைத்தீவு | .................. |
| 92. | வவுனியா | .................. |
| 94. | திருகோணமலை | .................. |
| 95. | மூதூர் | .................. |
| 96. | கல்குடா | .................. |
| 97. | மட்டக்களப்பு (1) | .................. |
| | (2) | .................. |
| 98. | பட்டிருப்பு | .................. |
| 100. | சம்மாந்துறை | .................. |
| 101. | கல்முனை | .................. |
| 102. | பொத்துவில் (1) | .................. |
| | (2) | .................. |
| 103. | புத்தளம் | .................. |

(2) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .......... |

(3) மேற்கண்ட 23 தொகுதிகளிலும் மிக அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெறும் வேட்பாளர் யார்?

| தொ.இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .......... |

(4) மேற்கூறிய 23 தொகுதிகளிலும் மிகக்குறைந்த பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்யப்படும் வேட்பாளர் யார்?

| தொ. இல. | தொகுதி | வேட்பாளர் |
|---|---|---|
| .......... | .......... | .......... |

(5) பின்வரும் தொகுதிகளில் வரிசைக் கிரமமாக வரக்கூடிய முதல் மூன்று வேட்பாளர்களையும் குறிப்பிடுக.

| தொ.இல. | தொகுதி | | வேட்பாளர் |
|---|---|---|---|
| 79. | ஊர்காவற்றுறை | 1. | .................. |
| | | 2. | .................. |
| | | 3. | .................. |
| 84. | உடுப்பிட்டி | 1. | .................. |
| | | 2. | .................. |
| | | 3. | .................. |
| 85. | பருத்தித்துறை | 1. | .................. |
| | | 2. | .................. |
| | | 3. | .................. |
| 88. | யாழ்ப்பாணம் | 1. | .................. |
| | | 2. | .................. |
| | | 3. | .................. |
| 97. | மட்டக்களப்பு | 1. | .................. |
| | | 2. | .................. |
| | | 3. | .................. |

தபாற்கட்டளை/ காசுக்கட்டளை இல .......... ரூபா .......... இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது 'ஈழநாடு' ஞாயிறு வாரமலர்களிலும், புதன்கிழமைகளில் வரும் 'ஈழநாடு' தினசரியிலும் வெளியிடப்படும் 'ஈழநாடு தேர்தல்-77போட்டி' நிபந்தனைகளுக்கும் அதன்நடுவர் குழு''வின் தீர்மானத்துக்கும்கட்டுப்படுகிறேன் என்று இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்

பெயர்: ... ... ... ... ... ... ...

முகவரி: ... ... ... ... ... ... ... ... ...

திகதி ..........

கையொப்பம்

குறிப்பு: (1) மட்டக்களப்பும் பொத்துவிலும் இரட்டை அங்கத்தவர் தொகுதிகளானதால் வாக்காளருக்கு இருவாக்குகள் உண்டு. எனவே இத் தொகுதிகளின் வேட்பாளர்களுக்கு கிடைக்கும் வாக்குகளை சரிபாதியாகப் பிரித்துவரும் எண்ணிக்கையையேஇப்போட்டியில் மற்றைய தொகுதிகளுடன்ஒப்பிடுவதற்கு எடுக்கப்படல் வேண்டும்.

குறிப்பு: (2) மட்டக்களப்பு-பொத்துவில் தொகுதிகளில் இப்போட்டிக்கான அதிகப்படி வாக்குகளைக் கணிக்கும் முறை:-

முதலாவது 2வது அங்கத்தவர்களின் அதிகப்படிவாக்குகள்= அவரவர் வாக்குகளின் சரிபாதியிலிருந்து மூன்ருவதாக வந்த வேட்பாளரின் சரிபாதி வாக்குகளைக் கழித்து வரும் தொகைகளாகும். போட்டி முடிவுதிகதி 20-7-1977.

மனோகரா
[யாழ்ப்பாணம்]
இன்று முதல்
அசோகன்-சரோஜாதேவி
நடித்த
மணப்பந்தல்

வெகு விரைவில் வருகிறது
எம். ஜி. ஆர். நடித்த
உழைக்கும் கரங்கள்

REGAL (JAFFNA)
CROWDED 2nd WEEK
Daily: 4-45, 7-00 & 9-30 p. m.

Dicing with Danger. Pulse Tingling Thrill - A-Minute Adventure in a Devil May care world of Cavier, Rubbling Champagne, Eye- CatchingGirls... and Ruthless Crooks.

Tony Curtis - Roger Moore - Susan George
in
"Mission Monte Carlo"
(Color) (Action Packed Film)

சாந்தி
யாழ். நகர்
போன்; 7642
தினசரி
4 காட்சிகள்
10-30, 2-30, 6-30, 9-45
★ சிவாஜி ★ சரோஜாதேவி
எம் ஆர். ராதா ரங்கராவ்
கலைஞர் மு. கருணாநிதியின்
இருவர் உள்ளம்
(புதிய பிரதி)

RIO (Jaffna) Daily 10-30, 4-45, 7-15, 9-45 p.m.
DANIEL DEFOE'S
1-30 P. M. Special show for Schools
-IMMORTAL CLASSIC-
ROBINSON CRUSOE
(Family Entertainment)

ராஜா
(யாழ்நகர்)
55-வது தினம்
தினசரி 4 காட்சிகள்
போன்: 7180
தேவரின்
திருவருள்
(ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு:- பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்கு செய்து கொள்ளலாம்.

58-வது நாள்
ராணி
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா
(இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - பத்மபிரியா
முத்துராமன் - சகுந்தலா
நடித்த
ஸ்ரீதரின் வைரநெஞ்சம்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவராம், கீதாஞ்சலி, தர்மலிங்கம், ஸ்ரீதேவி
மற்றும் பலர் திறம்பட நடித்த
ஈழத்திரையோவியம்
ஜெயேந்திரா மூவிஸ்
காத்திருப்பேன் உனக்காக


# '1970-ம் ஆண்டில் என் குறைகள் தெரியவில்லையா?'

—வி. குமாரசுவாமி

யாழ்ப்பாணம், வெள்ளி

"1970ம் ஆண்டு சாவகச்சேரியில் தமிழ்க்காங்கிரஸ் மாநாட்டிலும், தேர்தல்பிரசாரக் கூட்டங்களிலும் என்னை வானளாவப்புகழ்ந்து என் சேவைகளைப் பாராட்டிய போது என்குறைகளைத் தெரியாதநண்பர் உடுப்பிட்டி சிவாவுக்கு ஏழுவருடத்தின் பின் அவர் எதிர்அணியில் சேர்ந்த பின்தான் என்குறைகள்தெரிவதுவிந்தையாக இருக்கிறது."

அல்லாரையில் நேற்று முன்தினமிரவு நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய சாவகச்சேரித்தொகுதி ஜி.ஜி. காங்கிரஸ் அபேட்சகர் திரு. வே. குமாரசாமி மேற்கண்டவாறு கூறினார்.

திரு.வி.வேலுப்பிள்ளை, தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. வே. குமாரசாமி மேலும் கூறியதாவது:

"நண்பர் சிவாவைப்பற்றி எனக்கு நன்கு தெரியும். அவர் எங்கு நிற்கின்றாரோ அந்த பக்கத்தை ஆதரித்துத் தான் பேசுவார். 62ம் ஆண்டுகச்சேரி சத்தியாக்கிரகத்தின் போது தமிழரசுக் கட்சியுடன் இணைந்து செயலாற்றியவர்; 65ம் ஆண்டு தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் தமிழரசுக்கட்சியினரை மேடைக்குமேடை தாக்கிப்பேசினார். இதேபோல் தான் அன்று என்னைப்போற்றியவர் இன்று தூற்றுகிறார். நாளை சிலசமயம் போற்றக் கூடும்.

தலைவர் திரு.ஜி.ஜி.யைநான் வால் அறுந்த நரி என்று எந்த சந்தர்ப்பத்திலும் கூறவில்லை. ஆனால் நம்பிய ஆதரவாளர்களை கைவிட்டு பதவிக்காக இன்று எதிரணியில் சேர்ந்த வாலறுந்த நரியாக நிற்பது யாரென்பது மக்களுக்குத்தெரியும்.

"62ம்ஆண்டு சத்தியாக்கிரகத்தை ஆதரிப்பது பற்றி தமிழ்க்காங்கிரஸ் தீர்மானிக்க முன்னரே தலைவர் ஜி ஜி.யின் ஆலோசனையையும் கேளாமல் அவசரப்பட்டு தமிழரசுக்கட்சியுடன் இணைந்து செயலாற்றிய நண்பர் இவர். இன்று தலைவர் ஜி.ஜி.யை தேர்தலுக்காகப் போற்றுகின்றார்.'

திரு.ஆர். இராஜகுலேந்திரன் பேசும் போது, "கூட்டணியினர், தந்தை செல்வாவின் அஸ்தியைத் திருமலைக்குக் கொண்டுசென்றார்களென்றும், ஆனால் ஜி. ஜி. யின் அஸ்தியை, வவனியாவிற்குக்கூட கூட்டணியினர் கொண்டு செல்லமுயற்சிக்கவில்லையென்றும் கூறினார்.

திருவாளர்கள்: வி. கனகசபை, ஆர். ஏ. தில்லைநாதன், வி. பரராசா, ஆர். சந்திரன் ஆகியோரும் பேசினர்கள். (க)

## இன்றைய திருவிழா

யாழ்ப்பாணம், வெள்ளி

நல்லூர்மூத்தவிநாயகர் ஆலயத் திருவிழா இன்று கொண்டாடப்படுகிறது இன்றையதிருவிழா நல்லூர் மூத்தவிநாயகர் சைவமன்ற இளைஞர்களால் நடத்தப்படும். பகல் விசேஷ ஆராதனைகளையும், பூஜைகளையும் தொடர்ந்து மாலை அண்மையில் மலேசியா சென்று திரும்பிய தவில்வித்துவான்களுடைய தவில் கச்சேரியும், திரு. சிவஅன்புவின் 'அருணகிரிநாதர்' பற்றி கதாப்பிரசங்கமும் அருணா குழுவின் மெல்லிசையும் இடம்பெறும். [கா]

## இன்று பூங்காவனம்

உரும்பராய், வியாழன்

உரும்பராய் கற்பகவிநாயகர் ஆலய மகோற்சவம் கடந்த 10ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 29ம் திகதி தேர்த்திருவிழாவும் 30ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெற்றன. இன்று பூங்காவன உற்சவம் நிகழும்.

கொடியேற்ற விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக அன்று மாலை 7 மணி தொடக்கம் இன்னிசைவேந்தன் திரு. உ. ராதாகிருஷ்ணனின் வயலின் கச்சேரி இடம்பெற்றது. (அ)

## இன்று

யாழ்ப்பாணம், வெள்ளி

கந்தரோடை - ஒட்டங்கட்டு ஞானவைரவர் கோவில் பொங்கல்விழா இன்று நடைபெறுகிறது. இசைநிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

## மகாஜன சம்பத முடிவுகள்

கொழும்பு, வியாழன்

நேற்று இழுக்கப்பட்ட மகாஜன சம்பத சீட்டிழுப்பில் முதல் மூன்று ரிக்கட்டுகளின் விபரம்:

35 D 0890
28 O 0532
05 R 0286

இவற்றிற்கு தலா ஒரு லட்சம் ரூபா பரிசாக வழங்கப்படும்.

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி

காவலூர் சரவணை தெங்கங்குளம் நாச்சிமார் கோவில் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 3-ந் திகதிவரை நடைபெறவுள்ளது. கிரியைகள் நேற்றுஆரம்பமாயின. (கெ அ)


வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி - சரோஜாதேவி
வளர்பிறை

3-வது வாரம்
நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி—விஜயா
நடித்த
தங்கப்பதக்கம்

கடைசி வாரம்
புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
முத்துராமன் - சுஜாதா
வாழ்ந்து காட்டுகிறேன்


## வரி விளம்பரம்


**கல்வி**

H. N. C. E. முதலாம் இரண்டாம் வருடக் கணிதம், பௌதிகம், இரசாயனம் வகுப்புகளும் I. C. M. A. Section A Costing, Accounts, Economics வகுப்புகளும் Spoken English 2-7-77 பி. ப. 2-30க்கு ஆரம்பமாகிறது. மிகத் திறமையான ஆசிரியர்கள். அதிபர், பல்கலைக்கலவிக் கழகம்MEI, 508, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 6568


## அந்தியேஷ்டி அறிவித்தல்



எமது தந்தையாராகிய திரு. எம். எஸ். இராஜா அவர்கள் யூன் மாதம் 2ந் திகதி காலமாகிவிட்டார். அன்னாரின் அந்தியேஷ்டிக் கிரியைகள் யூலை மாதம் 2ந் திகதி கீரிமலையிலும் இல்லத்தில் மாகேஸ்வர பூசையும் நிகழும். உறவினர்கள், நண்பர்கள் மற்றும் சகலரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்
இ. ஸ்ரீ. கார்த்திகேயன்
6566

## தேர்தல் சலசலப்பால் திருட்டுக் குறைந்தது

உடுப்பிட்டி, வியா.

கரவெட்டிப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் தற்போது குறைந்துள்ளன.

உடுப்பிட்டித் தொகுதியில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஒன்பதுவேட்பாளர்கள் போட்டியிடுவதால் இரவுவேளைகளில் துண்டுப்பிரசுரங்களைச் சுவர்களில் ஒட்டும் வேலைகளிலும், வீதிகளில் வாசகங்கள், சுலோகங்கள் பொறிக்கும் வேலைகளிலும் வேட்பாளர்களின் ஆதரவாளர்கள் தொகுதியின் மூலைமுடுக்குகள் எல்லாம் உலவி வருவதால்திருடர்கள் வழக்கம் போல் தமது கைவரிசையைக் காட்டுவதற்கு நடமாடமுடியாதநிலையிலுள்ளதாகத் தெரிகிறது. (அ)

## மரண அறிவித்தல்

### தங்கமுத்து சிதம்பரப்பிள்ளை

காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் மனைவியும், ஆசிரியர் சி. சிவரத்தினம் (யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்), நவரத்தினம், திருமதி மங்கையர்க்கரசி ஞானசேகரம், திருமதி இராசலட்சுமி சண்முகலிங்கம் ஆகியோரின் தாயாருமாவார். ஈமக்கிரியைகள் 1-7-77 வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு 48, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்திலிருந்து வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

6567 தகவல்: சி. சிவரத்தினம்.


வெலிங்டன்
(யாழ். நகர்)
ஜெய்சங்கர்—வாணிஸ்ரீ
நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
தபால்காரன் தங்கை

றீகோ போன்: 7693
(யாழ். நகர்)
(புதிய பிரதி)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
ஜெய்சங்கர்
நடித்த
வல்லவன் ஒருவன்

# ஈழநாடு

The EELANADU


## 'இந்திய இசை விழாவில் இலங்கைக் கலைஞருக்கும் இடமளிக்கவும்''

யாழ்ப்பாணம், வெள்ளி கல்வி, கலை கலாச்சாரக் காப்புக் கழகக் கட்டிடத்திற்கான கால்கோள் விழாவை எதிர்வரும் ஆவணியில் நடத்துவதென்று கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கூட்டத்திற்கு தலைமைவகித்த சட்டத்தரணி ஆ. சோமசுந்தரம் தெரிவித்தார். இக்கூட்டம் நல்லைஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது. கழகத்தின் செயற்பாடுகள் பற்றியும் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

கூட்டநடுவில் திரு. ஆ. துரைராஜசிங்கம் தலைமைவகித்தார்.

இந்தியாவில் அண்ணமலை இசைத்தமிழ்மன்றம் நடத்தும் இசைவிழாவில் இலங்கை இசைக்கலைஞர்கள் பங்குபற்றுவதற்கு வாய்ப்பு அளிக்கப்படவேண்டும் என்றுகோரி கழகப் பொதுச்செயலாளர் ஓவியர் ச. பெனடிக்கினல் கொண்டுவரப்பட்ட தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. (அ)

## 3 புசல் நெல்லுக்கு 14 ரூபா பஸ் கூலியாம்

### மேலிடத்திற்குப் புகார்

யாழ்ப்பாணம், வெள்ளி முல்லைத்தீவிலிருந்து பஸ் மூலம் யாழ்ப்பாணம் வந்த ஒருவர் தாம் கொண்டுவந்த நெல்லுக்கு அதிகபணம் அறவிடப்பட்டதாக இ. போ. ச. மேலிடத்திற்குப் புகார்செய்துள்ளார்.

கொழும்பு பிரதம தந்தி அஞ்சலதிபரான திரு. தியாகராஜா என்பவர் முல்லைத்தீவிலிருந்து யாழ்ப்பாணம் வந்தபோது மூன்றுபுசல் நெல்லை இருமுடிச்சுக்களாகக் கட்டி எடுத்துவந்ததாகவும், இதற்குக்கண்டக்டர் பொதி கூலியாக 6 ரூபா அறவிட்டதாகவும் பின்னர் நண்பகல் இவர்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தை வந்தடைந்து தமது பொதியை இறக்கமுற்பட்டபோது டூடீர் பரிசோதனைக்குழுவைச் சேர்ந்த ஒருவர் அவற்றை இறக்கவேண்டாம் என்றும் அதற்குப் பணம் செலுத்தப்படவேண்டும் என்றும் கூறி, ஏற்கனவே 6ரூபா செலுத்தியிருப்பதாகக் கூறியும் அந்த உத்தியோகஸ்தர் மேலும் 8 ரூபா கட்டும்படி வற்புறுத்தியதன்பேரில் 8 ரூபாவும் செலுத்தியபின் இதுபற்றி பஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறையிட்டதாகவும் அப்பொறுப்பதிகாரி, அறவிடப்பட்ட தொகை மிக அதிகம் என்று எழுத்தில் கொடுத்துள்ளதாகவும் அறியப்படுகிறது. இதுபற்றி மேலிடத்திற்குப் புகார் செய்யப்பட்டுள்ளதாம். (கா-அ)

## மலையகத் தமிழனின்—

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படப்போவதில்லை என்பதாலேயே இளைஞர்களாகிய நாம் புனித குரானின் அடிப்படையில் முஸ்லிம் ஐக்கியமுன்னணியைத் தோற்றுவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியுடனும் எம்மை ஓர் அங்கமாக்கியிருக்கிறோம்.'

### செல்லச்சாமி பேச்சு

திரு. எஸ். செல்லச்சாமி பேசுகையில் கூறியதாவது: 'நான் நியமனப்பத்திரம் தாக்கல்செய்த அன்றே என்னை தங்கள் பிரதிநிதியாக இத்தொகுதி மக்கள் தெரிவுசெய்துவிட்டார்கள். ஏழைகள் அடக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் எங்கள் பக்கம். சிங்களப்பாட்டாளிகள் எங்கள் பக்கம். 48 ஆயிரம்பேர் எமது பக்கம் இருக்கிறார்கள். நாம் நியமனப்பத்திரம் தாக்கல் செய்ததுமே பலமான அரசியல் தலைவர்கள் ஆட்டம்காண ஆரம்பித்துவிட்டார்கள்.

'தோட்டக்காட்டுச்சாமி பேரவையில் தமிழ்முழக்கம் செய்யத்தான்போகிறேன். நாம் யாருக்கும் விரோதமாகச்செயயப்போவதில்லை. 35 லட்சம் தமிழ்மக்களின் எழுச்சிக் குரலாகவே நான் போட்டியிடுகிறேன். 1932-க்குப் பின்னர் 15 லட்சம் மலைநாட்டுத் தமிழருக்காகப் பேரவையில் குரல் ஒலிக்கப்போகின்றது.

திரு. பீட்டர்கெனமன் என்னைக்கேட்கிறார் எனக்கு லெனினிசம், மார்க்ஸிசம் தெரியுமா என்று. பிறப்பால், வளர்ப்பால், வாழ்க்கையால், சேவையால் சமதர்மவாதிநான். தமிழினத்தின் உணர்ச்சி கொழுந்துவிட்டு எரிகிறது. அந்த உணர்ச்சி வடக்கு கிழக்கைவிட கொழும்பு மத்தியில் அதிகம். யார் ஆட்சிக்கு வந்தாலும்நமக்குக் கவலையில்லை. நமது உரிமைகளைப்பெற, தமக்கு ஒரு பிரதிநிதித்துவம் இன்மையால் பசியால் மடியும் மலையகத் தொழிலாளியின் பரிதாபத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க கொழும்பு மத்தியில் நாம் வெற்றிபெறுவோம்'

தலைமைவகித்த திரு. எஸ். தொண்டமான் தனது உரையில், 'திரு. செல்லச்சாமி ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் பொதுச்செயலாளர் என்றும் 30 ஆண்டுகளாக கொழும்பு மத்தியில் மறுக்கப்பட்ட உரிமைகளைத் திரும்பப்பெற முனைந்துவிட்டோம், மலையகத் தொழிலாளிசரிபங்குக்குத்தயாராகிவிட்டான்; ஒதுக்கப்பட்ட நாம் இனியும் ஒதுங்கமாட்டோம் என்றார். (ம)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram Eelanaadu Telephone 389 Registered as News paper in Sri Lanka

## களியாட்ட நிதி முழுவதும் வருமா?

யாழ்ப்பாணம், வெள்ளி வடமாநில புற்றுநோய் தடுப்புச் சங்கத்துக்கு நிதி உதவி அளிப்பதற்கென யாழ். ரோட்டரிக்கழகத்தினர் நடத்துவதற்கு உத்தேசித்துள்ள களியாட்டுவிழாவின்மூலம் கிடைக்கும் நிகர இலாபம் முழுவதும் புற்றுநோய்த் தடுப்புச் சங்கத்துக்கு வழங்கப்படுமா? என்று வடமாநில புற்றுநோய் தடுப்புச் சங்கத்தின் துணைத்தலைவர் டாக்டர் க. கனகரத்தினம் யாழ். ரோட்டரிக்கழகத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளார்.

இந்த நிதி உதவி களியாட்டு விழா பற்றி புற்றுநோய் தடுப்புக் குழுவுடன் கலந்தாலோசனை செய்திருக்கவேண்டும் என்றும் டாக்டர் கனகரத்தினம் தமது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இன்று பாராட்டுபசாரம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ். பல் தொழில்நுட்ப உபதலைவரும் நல்லூர் பலநோக்குகூட்டுறவுச்சங்க உபதலைவருமான திரு. இராஜேந்திரா அரசாங்க புலமைப்பரிசில் பெற்று தொழிற்கல்விப் புலமை பெறுவதற்காக சிங்கப்பூர் செல்லவிருக்கின்றார்.

இவரைக் கௌரவிக்கும் பொருட்டு நேற்று முன்தினம் பல்தொழில் சட்ட பொறியியல் மாணவர் மன்றம் தேநீர் விருந்தொன்றையளித்தது.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர்சபை இன்று பாராட்டு வைபவம் நடத்துகின்றது. இவ் வைபவத்துக்கு இயக்குநர்சபைத் தலைவர் திரு. இ. பொ. குமாரசாமி தலைமை வகிப்பார். தேநீர்விருந்தும் இடம்பெறும்.

கைதடி இலங்கை சைவ அநாதை இல்ல மேல்மாடித் திறப்பு விழாவும் வருடாந்த விழாவும் பொதுக்கூட்டமும் இன்று நடைபெறுகின்றது.

மேல்மாடி மண்டபத்தை காலையில் மூதூர் நீதிபதி திரு. ஆ. ஞானச்சந்திரன் திறந்துவைப்பார். அதைத் தொடர்ந்து பண்டிதை • தங்கம்மா அப்பாக்குட்டி உரையாற்றுவார். மாலையில் நடைபெறும் கூட்டத்தில் அநாதைஇல்லம் என்ற பெயர் ''இலங்கை சைவத் தரும இல்லமென பெயர் மாற்றப்படும். (கெ-அ)

## ஆசிரியர்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இம்மகாநாட்டிற்கான சகல ஒழுங்குகளையும் யாழ. மாவட்டக் கிளை செய்துள்ளது.

தென்னிலங்கையிலிருந்து பெருந்திரளான ஆசிரியர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்றே ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

பின்வரும் பிரேரணைகள் இன்றைய மகாநாட்டில ஆராயப்படவுள்ளன;—


தராதர அடிப்படையில்சம்பளமாற்றுத்திட்டம்,மூப்புஅடிப்படையில் டிப்ளோமா தெரிவு, கஷ்டப்பிரதேசங்களுக்கு, டிப்ளோமா பயிற்சியாளரை அனுப்புவதை தடை செய்தல்.

சகல அரசியல்கைதிகளையும் விடுதலை செய்யவும், தற்போது நடைமுறையிலிருக்கும் பாதுகாப்பு சட்டம், குற்றவியல் நீதி ஆணைக்குழு, அடக்குமுறைச் சட்டத்தை நீக்கும்படியும் கோருதல்.

தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களமும், சிங்களப் பாடசாலைகளில் தமிழும் போதிக்கப்படவேண்டும்.

சகல பாடசாலை மாணவர்களுக்கும் பகற் போசனம் வழங்கப்படவேண்டும், பாடசாலைகளில் பொது வைபவங்களுக்கு பணம் வசூலிப்பதைத் தடை செய்தல், கிழக்கில் பல்கலைக்கழகம் அமைத்தல்.

தோட்டப் பாடசாலைகள் தனியார் பாடசாலைகள் ஆகியன தேசியமயமாக்கப்படவேண்டும். (கெ-கு-இ)



வேலர்: காணி எல்லை தெரியாதவன் வழக்குப்பேச வெளிக்கிடக்கூடாது. தொகுதி எல்லை தெரியாதவை எலெக்ஷன் கேட்க வெளிக்கிடக்கூடாது.

மயிலர்: ஏன்?

வேலர்: அந்த வேட்பாளரும் மனைவியும் தங்களுடைய தொகுதி எல்லைதெரியாது,எங்கடைதொகுதிஎல்லாம் வந்து அழுதிட்டுப்போகுதுகள்.

— சுந்தர்

## குருநகர் கொலை: ஐவர் கைது

யாழ்ப்பாணம், வெள்ளி கொலைச் சந்தேகத்தின் பேரில் குருநகர் பொலிசார் ஐவரைக் கைது செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் இராஜசிங்கம் வீதி (திட்டி)யில் இம்மாதம் 24 ம் திகதி கைத்தாம்பிள்ளை சின்னராசா என்பவர் வாளால் வெட்டியும் கற்களால் குத்தியும் கொலை செய்யப்பட்டது தொடர்பாகவே இவர்கள் கைது செய்யப்பட்டனர். 24 ந் திகதியன்றே ஏ. ராஜு, ஆர். விஜயன் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். ஏ. செல்லத்தம்பி, பி. செல்லமணி, பி. மரகதன் ஆகிய மூவரும் அடுத்த நாள் திட்டியில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.

கொலையுண்ட சின்னராசா என்பவர் அதிர்ச்சியினாலும், இரத்தப்பெருக்கினாலும் இறந்துள்ளதாக வைத்திய அறிக்கை தெரிவிக்கின்றது.

ஐவரையும் யாழ்ப்பாணம் பதில் நீதிபதி திரு. எஸ். கனகரத்தினம் அடுத்த மாதம் 5 ம் திகதிவரை ரிமாண்டில்வைக்க உத்தரவிட்டார். (கூ)

## வாக்காளர் அட்டை விநியோகம்

யாழ்ப்பாணம், வெள்ளி போயாதினமான நேற்று யாழ்ப்பாணத்தில் தபால் மூலம் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

இவ்வட்டைகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் தபால் நிலையத்திற்குச் சென்று நேரடியாக அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்றும் குறித்த விலாசத்தில் வாக்காளர் அட்டை விநியோகிக்கப்படாவிட்டால் அது தபால் நிலையத்தில் தேர்தல் அன்று வரை வவைக்கப்பட்டிருக்கும் என்று தபால் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (கி-அ)

## எம். ஜி. ஆர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

### 2 பேர் கொண்ட அமைச்சரவை

பாண்டிச்ரேரியில் 2 உறுப்பினர்களைக்கொண்ட அ. இ. அ. தி. மு. க. அமைச்சரவை நாளை சனிக்கிழமை பதவி ஏற்கும் என்று கவர்னர் திரு. குல்கர்ணி தெரிவித்தார்.

பாண்டிச்சேரியில் ராஷ்டிரபதி ஆட்சியை ரத்துச் செய்யுமாறு தாம் மத்திய அரசிடம் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### அ. இ. அ. தி. மு. கழக நிலை

பாண்டிச்சேரியில் பெரும்பான்மைப் பலம்பெற்ற அ. இ. அ. தி. மு. கழகத்துக்கு ஆதரவு வழங்கக் (காங்கிரஸ் (2 உறுப்பினர்கள்) முன்வந்தபோதிலும் கடைசி நேரத்தில் ஆட்சி அமைப்பு முயற்சிகள் கைகூடவில்லை என்று செய்திகள் தெரிவித்தன. அதே நேரத்தில் ஜனதாகட்சியுடன் ஆட்சி நிறுவ அ. இ. அ. தி. மு. கழகம் முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் இதற்கு எழுந்த எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக இம்முயற்சியும் நேற்றுக் கைகூடவில்லை. அ. இ. அ. தி. மு. கழகத்துடன் சேரமாட்டோம் என்றும் தமது கட்சி வலுவான எதிர்க்கட்சியாகவே இயங்குமென்றும் புதுச்சேரி ஜனதாகட்சியின் சட்ட சபைத் தலைவர் திரு. அன்ஸாரி துரைசுவாமி இன்று தெரிவித்துள்ளார்.